**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.95/2012**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.1 மோகனா , வயது 85 , க/பெ தனக்கோட்டி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சித்ரா, வேண்டா, அஞ்சலா, வர்த்தா ஆகியோர்கள் யார் என்றால் என் மகள்கள் ஆவார்கள். 6ம் பிரதிவாதி துளசி யார் என்றால் என் கணவரின் முதல் மனைவியின் மகள் ஆவார். துளசி தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. 8ம் பிரதிவாதி மாணிக்கம் என்பவர் யார் என்றால் துளசியின் கணவர் ஆவார். தாவா சொத்தை நானும் என் மகள்களும் சேர்ந்து 3ம் தரப்பினருக்கு விற்க முயன்றோம் என்றால் சரியல்ல.

2. ஏற்கனவே அசல் வழக்கு 82/1997 என்ற வழக்கில் துளசி என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தரப்பினராக சேர்த்துள்ளோம். என் கணவர் தனக்கோட்டியுடன் பிறந்தவர்கள் யார் என்றால் ஆனந்தன், சின்னராஜ் ஆவார்கள். 17.11.1981 அன்று என் கணவரும் மற்ற இரு நபர்களும் சேர்ந்து ஒரு கூர் சீட்டை ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான். என் கணவரின் அண்ணன் தம்பிகள் சேர்ந்துதான் மேற்படி கூர் சீட்டை அவர் தந்தை இருக்கும் காலத்தில்தான் ஏற்படுத்தினார்கள்.

3. மேற்படி கூர் சீட்டின் படி 'ஏ' அட்டவணை சொத்து ஆனந்தன் என்பவருக்கும், 'பி' அட்டவணை சொத்து தனக்கோட்டி என்பவருக்கும், 'சி' அட்டவணை சொத்து சின்னராஜ் என்பவருக்கும் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். என் கணவருக்கு பாத்தியப்பட்ட பி அட்டவணை சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சர்வே எண் என்ன, விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 95 சென்ட் உள்ளது, அதில் 40 சென்ட் விற்று, மீதம் 45 சென்ட் எங்கள் வசம் உள்ளது.

4. மேற்படி கூர் சீட்டின்படி என் கணவருக்கு பிரிக்கப்பட்ட 'பி' அட்டவணை சொத்தின் சர்வே எண். 277/4, 277/5, 277/7, 278/3 ஆகியவைகள் என் கணவருக்கு பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.277/6 மேற்படி கூர் சீட்டில் இல்லாத சர்வே எண் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இந்த தாவா வழக்கின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சுந்தரமூர்த்தி என்ன வழக்கை தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. என் வழக்கறிஞர் எனக்கு இவ்வழக்கின் சங்கதிகளை படித்து எடுத்து கூறினாரா என்றால் சொன்னார், அவ்வாறு வழக்கின் சங்கதிகள் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பதிலுரையில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையதுதான். வாதி சுந்தரமூர்த்தி வழக்கை தாக்கல் செய்த பின்னர் என் வழக்கறிஞர் மூலம் பதிலுரை தயார் செய்து அதில் என் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்படி பதிலுரையில் என்ன சங்கதிகள் உள்ளது என்றாலும், என் வழக்கறிஞர் படித்து காண்பித்தார் என்பதால் அதன் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

6. மேற்படி பி.வா.சா.ஆ.3 பட்டா என் கணவர் பெயருக்கு வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் பெறப்பட்டது என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்ததும் பட்டா பெற்றோம். அந்த தீர்ப்பு எந்த வருடம் பெறப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni